செ.வெ.எண்.959 நாள்.29-10-2010

# செய்தி வெளியீடு

வேளாண்மை உயிரி தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து தனியார் துறைகளில் வேலை வாய்ப்பினை பெற்றுத் தரும் திட்டம்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் முதல் கூட்டம் 29.10.2010 அன்று மாலை 3.00 மணியளவில் இக்குழுவின் தலைவர் முனைவர் திரு. பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் மற்றும் துணைத் தலைவர் திருமதி மல்லிகா சீனுவாசன், டஃபே நிறுவனம் மற்றும் இதர உறுப்பினர்களுடன் தலைமைச் செயலக வேளாண் துறையின் கூட்டரங்கில் நடைபெற்றது.

இதுவரை, கோயம்புத்தூர், சென்னை மற்றும் திருச்சி ஆகிய மூன்று மையங்களில் தமிழகத்தின் மேற்குப்பகுதி, வடபகுதி மற்றும் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளின் நிறுவனத்தார்களின் கூட்டம் அக்டோபர் 2010 மாதத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தின் மூலம் 2010–11 மற்றும் 2011–12 ஆம் ஆண்டிற்குத் தேவைப்படும் மனிதத் திறன் 11540 என அறியப்பட்டது. நடப்பாண்டில் மட்டும் 3992 நபர்களுக்கும், 2011–12 ஆம் ஆண்டில் 7578 நபர்களுக்கும் பயிற்சி அளித்து வேலை வாய்ப்பு வழங்கிட பங்கேற்ற நிறுவனத்தார்களிடமிருந்து தேவை விபரம் பெறப்பட்டது. குறிப்பாக விதை உற்பத்தி மற்றும் விநியோகம், கோழிப்பண்ணை மற்றும் பண்ணை கருவிகள் தயாரித்தல் போன்ற நிறுவனங்களில் அதிகத் தேவை விபரம் பெறப்பட்டது.

பள்ளிப் படிப்பு முடித்த, பத்தாம் வகுப்பு மற்றும் +2 படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு 2091 எண்களும், தொழில் கல்வி, பட்டயப்படிப்பு மற்றும் பட்டப்படிப்பு முடித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு இந்நிறுவனங்களின் மூலம் கூடுதலான வேலை வாய்ப்பு உள்ளது என இம் மூன்று மையங்களில் நடைபெற்ற கூட்டத்தின் மூலம் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலருக்காக

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.